# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

| | | |
|---|---|---|
| பிரிவு | : | TNPSC Group II தேர்வு |
| பாடம் | : | இந்திய தேசிய இயக்கம் |
| பகுதி | : | **இந்திய தேசிய காங்கிரஸ் - தேசிய தலைவர்களின் எழுச்சி** |
| | | (காந்தி, நேரு, தாகூர், நேதாஜி) |

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப்-2 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள்வடிவில்தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக்குறிப்புகளுக்கானகாப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# இந்திய தேசிய காங்கிரஸ் மற்றும் தேசிய தலைவர்களின் எழுச்சி

- இந்தியாவிற்குள் வியாபாரத்திற்காக நுழைந்த ஆங்கிலேய கிழக்கிந்திய வியாபாரக் கம்பெனி, உள்நாட்டு அரசியல் சூழ்நிலைகளையும், பலவீனங்களையும் பயன்படுத்தி இந்திய துணைக்கண்டம் முழுவதையும் தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தது. ஆட்சியாளர்கள் மக்களுக்கு இழைத்த கொடுமைகளினாலும், நாடு பிடிக்கும் கொள்கை களினாலும், கொடிய அடக்குமுறை நடவடிக்கைகளினாலும் வெறுப்படைந்த இந்தியர்கள் ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தை இந்தியாவிலிருந்து ஒழித்துக்கட்ட பல வழிகளில் முயன்று கொண்டிருந்தார்கள்.
- 1806 ல் நடைபெற்ற வேலூர் கலகமும் 1824 ல் பரக்பூரில் நடைபெற்ற படைவீரர் கலகமும், 1857 ல் நடைபெற்ற பெரும்புரட்சியும் அவைகளில் குறிப்பிடத் தக்கவையாகும். ஆனால் இந்திய மக்களிடையே தேசிய எழுச்சியையும், அரசியல் விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது இந்த கலகங்கள் மட்டுமே அல்ல, மாறாக மக்களின் வரலாற்று பாரம்பரியமும், இந்தியா ஒன்றுபட வேண்டுமென்ற எண்ணமும், தங்களுடைய தாய் நாட்டை தாங்களே ஆள வேண்டுமென்ற குறிக்கோளுமே இந்திய மக்களிடையே தேசிய எழுச்சி உருவானதற்கு காரணங்களாகும்.
- இனத்தால், மொழியால், சமயத்தால் பழக்க வழக்கங்களால் மாறுபட்டு அந்நிய ஆதிக்கத்தில் அவதியுற்ற மக்கள் எழுச்சியுற்று, ஒன்றுபட்டு ஆங்கிலேயர் ஆதிக்கத்தை எதிர்த்து அவர்களை வெளியேற்றி சுதந்திரம் அடைந்தனர்.

### 1. இந்திய தேசிய இயக்கம் தோன்றுவதற்கான காரணங்கள்:

**i. அரசியல் ஒற்றுமை**

- ஆங்கில ஆட்சியின் விளைவாக இந்தியாவில் அரசியல் ஒற்றுமை ஏற்பட்டது.
- அதனால் இந்தியா ஒரே நாடு என்ற எண்ணம் மக்களிடையே வளர்ந்தது.
- சமூக சமய சீர்த்திருத்த இயக்கங்களும் மக்களிடையே

விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களைச் ஒன்று சேர்த்தன.

**ii. ஆங்கிலேயரின் பொருளாதாரச் சுரண்டல்:**

- இந்தியாவின் செல்வ வளம் அனைத்தையும் தம் நாட்டிற்கு சுரண்டிச் செல்வதே ஆங்கிலேயரின் நோக்கமாக இருந்தது.
- 19ம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியா, ஆங்கில நாட்டிற்கு வேண்டிய கச்சா பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடாகவும், அந்நாடு உற்பத்தி செய்த பொருட்களை விற்பனை செய்யும் சந்தையாகவும் மாறியது.
- மேலும் ஆங்கிலேயர் தங்கள் மூலதனத்தை முதலீடு செய்து இலாபம் அடையும் இடமாக இந்தியா மாறியது.

**iii. இதர ஐரோப்பிய நாடுகளுடன் ஏற்பட்ட தொடர்பு**

- ஆங்கிலம், படித்த இந்தியர்களின் மொழியாகியது.
- அதனால் இந்தியர்கள் மேல்நாட்டு கருத்துக்கள், பண்பாடுகள் பற்றி அறிந்திருந்தனர்.
- மேலும் ஜெர்மனி, இத்தாலி ஐக்கியமடைந்தது கண்டு இந்தியர்கள் ஊக்கம் கொண்டனர்.
- எனவே தாங்களும் தங்கள் விடுதலைக்கு போராட எண்ணினர்.

**iv. 19 ம் நூற்றாண்டில் ஏற்பட்ட சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள்:**

- இராஜாராம் மோகன்ராய், தயானந்த சரஸ்வதி, இராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், டாக்டர் அன்னி பெசண்ட் ஆகியோர் இந்தியா மற்றும் இந்தியரின் புகழை புத்துயிர் பெறச் செய்தனர்.
- அவர்கள் இந்தியாவில் தேசிய இயக்கம் தோன்ற அடித்தளம் இட்டனர்.
- சுயராஜ்யம் என்ற சொல்லை முதன்முதலில் பயன்படுத்தியவர் தயானந்த சரஸ்வதி ஆவார்.

**v. தகவல் மற்றும் போக்குவரத்து முன்னேற்றம்:**

- இருப்புப்பாதை, தந்தி, கம்பியில்லா தந்தி முறை, தபால் முறை, சாலைகள் மற்றும் கால்வாய்கள் அமைத்தல் போன்றவை நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு உதவின. இத்தொழில் வளர்ச்சி இந்திய மக்களை ஒன்றிணைத்தது.

**vi. அச்சகமும், செய்தித்தாள்களும்**

- தேசியம் தோன்றவும், வளரவும் இந்திய பத்திரிக்கைகள் பெரும் பங்காற்றின.

- வட்டார மொழியில் பல செய்தித்தாள்கள் வெளியிடப்பட்டன.
- இவற்றில் பெரும்பாலானவை ஆங்கிலேயருக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டன.
- இவை இந்திய மக்களிடையே தேசிய உணர்வை பொங்கி எழச் செய்தன.

**vii.** இனப்பாகுபாடு

**viii.** லிட்டனது நிர்வாகம் மற்றும் மக்கள் விரோதச்சட்டங்கள்

**ix.** இல்பர்ட் மசோதா சச்சரவு

**x.** புதிய மக்கள் வர்க்கங்களின் வளர்ச்சி

**xi.** ஆட்சியாளர்களின் வரம்பு மீறிய ஏதேச்சதிகாரச் செய்லகள்

**2. ஆரம்பகால அரசியல் கழகங்கள்:**

**வங்காள கழகங்கள் மற்றும் ஆண்டு / தலைவர்:**

- பங்கபாஷா பிரகாசிக சபை (The Banga bhasha Prakasika Sabha) - 1836 ராஜாராம் மோகன்ராயின் நண்பர்கள்
- வங்காள பிரிட்டிஷ் இந்திய சமூகம் (The Bengal British India Society)- 1843
- பிரிட்டிஷ் இந்திய கூட்டமைப்பு(The British Indian Association) - 1851
- கிழக்கிந்திய கூட்டமைப்பு (The East India Association) - 1866 (லண்டன் தாதாபாய் நௌரோஜி)
- இந்திய லீக் (The Indian League) - 1875 (சிசிர் குமார் கோஷ்)
- இந்திய கல்கத்தா கூட்டமைப்பு (The Indian Association of Calcuta) - 1876 சுரேந்திரநாத் பானர்ஜி மற்றும் ஆனந்த மோகன் போஸ்

**பம்பாய் கழகங்கள் :**

- பம்பாய் கழகம் - 1852 (தாதாபாய் நௌரோஜி)
- பூனா சர்வஜானிக் சபை (The Poona Sarvajanik Sabha) - 1867 மகாதேவ்கோவிந்த ரானடே
- பம்பாய் மாகாண கூட்டமைப்பு (The Bombay Presidency - 1885 (பக்ருதீன் தியாப்ஜி, பெரோஷா மேத்தா Association) K.T. தேலங்)

**மதராஸ் கழகங்கள்:**

- மதராஸ் சுதேசி சங்கம் - 1852
- மதராஸ் மகாஜன சபை (The Madras Mahajan Sabha) - 1884 (M. வீரராகவாச்சாரி,

  B. சுப்ரமணிய அய்யர், P. ஆனந்த சார்லு)

<u>முந்தைய காங்கிரஸ் மாநாடுகள்/ ஆரம்ப அரசியல் இயக்கங்கள்</u>

| அமைப்பு | தலைவர் | இடம் | ஆண்டு |
|---|---|---|---|
| நில உரிமையாளர்,/ ஜமீன்தார் கழகம் | இரவீந்தரநாத் தாகூர் | கல்கத்தா | 1837 / 1838 |
| இந்திய தேசிய சங்கம் | A.O. ஹியூம் | கல்கத்தா | 1883 |
| பிரிட்டிஷ் இந்திய சமுதாயம் | ஜார்ஜ் தாம்சன் | கல்கத்தா | 1883 |
| மதராஸ் சொந்த சங்கம் | லஷ்மி நரசி செட்டி, PS செட்டியார் | மதராஸ் | 1852 |
| மும்பை சங்கம் | ஜகன் சங்கத்செத் | மும்பை | 1852 |
| கிழக்கிந்திய சங்கம் | தாதாபாய் நௌரோஜி | லண்டன் | 1866 |
| பூனா சர்வஞனிக் சபா | எம்.ஜி. ரானடே, GV ஜெர்சி | பூனா | 1870 |
| இந்திய சங்கம் | S.N. பானர்ஜி, ஆனந்த் மோகன் போஸ் | கல்கத்தா | 1876 |
| மதராஸ் மகாஜன சபா | ரங்கயைா நாயுடு, M. வீரராகவாச்சாரியார், G. சுப்ரமணிய ஐயர், ஆனந்த் சாரு | மதராஸ் | 1884 |
| இந்திய சமுதாயம் | ஆனந்த் மோகன் போஸ் | லண்டன் | 1872 |
| பிரிட்டிஸ் இந்திய சமுதாயம் | வில்லியம் ஆடம் | கல்கத்தா | 1839 |
| லண்டன் இந்திய சமுதாயம் | பத்ருதீன் தியாபி, W.C. பானர்ஜி | லண்டன் | 1865 |
| தேசிய சங்கம் | மேரி கார்பெண்டர் | லண்டன் | 1867 |
| தக்காணத்தின் சங்கம் | கோபால் ஹரி தேஸ்முக் | பூனே | 1852 |
| தேசிய பிரதிநிதிகள் குழு | | லண்டன் | 1883 |

### 3. இந்திய தேசிய காங்கிரஸ் (1885):

- ❖ பிரிட்டிஷ் அரசாங்கத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவரும், இந்திய நலனில் அக்கறை கொண்டவரான ஆலன் ஆக்டேவியன் ஹியூம் என்பவர் இந்தியர்களின் சமூக, அரசியல் நலன்களுக்காக ஒரு அகில இந்திய அமைப்பை தோற்றுவிக்க முயற்சிகள் எடுத்தார்.
- ❖ அதன் விளைவாக 1885 இந்திய தேசிய காங்கிரஸ் நிறுவப்பட்டு அதன் முதல் கூட்டம் 1885 ல் பம்பாயில்

நடைபெற்றது. புகழ்பெற்ற வழக்கறிஞர் **W.C. பானர்ஜி காங்கிரசின் முதல் தலைவராகவும், A.O ஹியூம் செயலாளராகவும்** தேர்ந்தெடுக்கப்பட்டனர். முதல் கூட்டத்தில் 72 பிரதிநிதிகள் இந்தியா முழுவதிலிருந்து கலந்து கொண்டனர்.

- காங்கிரசின் **இரண்டாவது கூட்டம் 1886 ல் கல்கத்தாவில் தாதாபாய் நௌரொஜி** தலைமையிலும் **மூன்றாவது கூட்டம் 1887ல் மதராசில் பக்ருதீன் தியாப்ஜி** தலைமையிலும் நடைபெற்றது.

**காங்கிரசின் நோக்கங்கள் மற்றும் கொள்கைகள்:**

- நாட்டின் நலனுக்காகப் பாடுபடும் பொது நலத் தொண்டர்களிடையே நெருக்கத்தையும் நட்புறவையும் வளர்த்தல்.
- இனம், மதம் மாகாண வேறுபாடுகளை நேரடி நட்புறவுகள் மூலம் நீக்கி நாட்டினரிடையே தேசிய உணர்வுகள், ஒருங்கிணைப்பு முயற்சிகளை வளர்த்தல், சிதறுண்டு கிடக்கும் இந்தியர்களை ஒரு தேசிய அமைப்பில் கொண்டு வருதல்.
- சமூகம், அரசியல், அறிவியல் ஆகிய அனைத்து துறைகளிலும் நாட்டை மறு சீரமைத்தல்.
- சமுதாயத்தின் முக்கிய பிரச்சனைகளில் கற்றறிந்த இந்தியர்களின் தெளிவான கருத்துக்களை கண்டறிந்து பதிவு செய்தல்.
- இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்குமிடையே ஓர் இணைப்பு பாலமாக செயல்படுதல்.

**இந்திய தேசிய காங்கிரஸின் (அ) தேசிய இயக்கத்தின் வரலாற்றை மூன்று முக்கிய நிலைகளாக அறிந்து கொள்ளலாம்:**

- மிதவாதிகள் காலம் (1885 - 1905) இக்காலத்தில் காங்கிரஸ் பிரிட்டிஷாருக்கு விசுவாசமாக செயல்பட்டது.
- தீவிரவாதிகள் காலம் (1905 - 1917) இக்காலத்தில் சுதேசி இயக்கம், தீவிரவாத தேசியம், தன்னாட்சி இயக்கம் போன்றவை நடைபெற்றன.
- 1917 முதல் 1947 வரையிலான காலம் காந்தியடிகள் காலம் எனப்படுகின்றது.

**4. மிதவாதிகள் காலம் (1885 - 1905):**

- தேசிய இயக்கத்தின் தொடக்க காலமான இந்த கட்டத்தில் ஏ.ஓ.ஹியூம், டபிள்யூ சி. பானர்ஜி, சுரேந்திரநாத் பானர்ஜி, **தாதாபாய் நௌரோஜி, பெரோஸ் - ஷா- மேத்தா, கோபால கிருஷ்ண கோகலே, மதன் மோகன்**

**மாளவியா, பக்ருதீன் தியார்ஜி, நீதிபதி ரானடே, ஜி. சுப்ரமணிய அய்யர்,D.E. வாச்சா** போன்றவர்கள் முக்கிய தலைவர்களாக இருந்து வழி நடத்திச்சென்றனர்.

- ❖ சுரேந்திரநாத் பானர்ஜி போராடுவதற்காக இந்தியக் கழகம் ஒன்றை தோற்றுவித்தார். அவர் நிறுவிய இந்திய தேசிய பேரவை (1883) பின்னர் 1886 ல் இந்திய தேசிய காங்கிரசுடன் இணைக்கப்பட்டது.
- ❖ ஜி. சுப்ரமணிய அய்யர் மதராஸ் மகாஜன சபை மூலம் தேசியத்தை பரப்பினார். "தி இந்து", சுதேச மித்திரன் போன்ற பத்திரிக்கைகளையும் அவர் நிறுவினார்.
- ❖ **தாதாபாய் நௌரோஜி** இந்தியாவின் முதுபெறும் மனிதர் என்று அழைக்கப்பட்டார். இந்தியாவிற்கான அதிகாரப்பூர்வமற்ற தூதராக இங்கிலாந்தில் இவர் கருதப்பட்டார். **பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் பொதுமக்கள் அவையில் உறுப்பினரான முதல் இந்தியர் இவரே ஆவார்.**
- ❖ கோபால கிருஷ்ண கோகலே காந்தியின் குருவாகக் கருதப்பட்டவர். 1905ல் இந்திய பணியாளர் சமூகத்தை (Servants of India Society) தோற்றுவித்தார். நாட்டிற்காக தொண்டு செய்ய இந்தியர்களுக்கு பயிற்சியளிப்பதே இக்கழகத்தின் நோக்கமாகும். முதல் சில ஆண்டுகள் காங்கிரஸ் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் ஆதரவைப் பெற்று திகழ்ந்தது.

**மிதவாதிகளின் கோரிக்கைகள்:**

- ❖ சட்டசபைகளை விரிவாக்குதல், சீர்த்திருத்துதல்.
- ❖ ஐ.சி.எஸ் தேர்வுகளை ஒரே சமயத்தில் இங்கிலாந்திலும், இந்தியாவிலும் நடத்தி உயர்பதவிகளில் இந்தியர்களுக்கு அதிக வாய்ப்புகளை ஏற்படுத்துதல்.
- ❖ நிர்வாகத்துறையிலிருந்து நீதித்துறையைப் பிரித்தல்.
- ❖ உள்ளாட்சி அமைப்புகளுக்கு மேலும் அதிகாரங்கள் வழங்குதல்.
- ❖ நிலவரியைக் குறைத்தல் - நியாயமற்ற நில உரிமையாளரிடமிருந்து குடியானவர்களை பாதுகாத்தல்.
- ❖ உப்பு வரி, சர்க்கரை வரியை ஒழித்தல்.
- ❖ ராணுவ செலவுகளைக் குறைத்தல்.
- ❖ பேச்சுரிமை, எழுத்துரிமை மற்றும் சங்கங்கள் அமைக்கும் உரிமை கோருதல்.

**மிதவாதிகளின் வழிமுறைகள்:**

- பிரிட்டிஷாரின் நீதி மற்றும் நியாயத்தில் மிதவாதிகள் பெருத்த நம்பிக்கை வைத்திருந்தனர். கோரிக்கை மனுக்களை அளித்தல், தீர்மானங்கள் போடுதல், கூட்டங்கள் நடத்துதல், துண்டு பிரசுரங்களை விநியோகித்தல், தூதுக்குழுக்கள் மூலம் பேச்சு நடத்துதல் போன்ற வழிமுறைகளை மிதவாதிகள் பின்பற்றினர்.
- அரசியல் உரிமைகளையும் தன்னாட்சியையும் படிப்படியாக அடைவதே அவர்களது குறிக்கோளாகும்.
- ஆரம்ப காலத்தில் பிரிட்டிஷ் அரசாங்கமும் இந்திய தேசிய காங்கிரசின் தோற்றத்தை வரவேற்றது. 1886ல்கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டின் உறுப்பினர்களுக்கு தலைமை ஆளுநர் டப்ரின் பிரபு தேநீர் விருந்தளித்தார்.

**மிதவாதிகளின் சாதனைகள்:**

- மக்களிடையே பரந்த தேசிய விழிப்புணர்வை மிதவாதிகளால் உருவாக்க முடிந்தது.
- ஜனநாயகம், சிவில் உரிமைகள், பிரதிநிதித்துவ நிறுவனங்கள் போன்ற சித்தாந்தங்களை பிரபலப்படுத்தினார்கள்.
- பிரிட்டிஷார் எவ்வாறு இந்தியாவை சுரண்டுகிறார்கள் என்று அவர்கள் மக்களுக்கு புரிய வைத்தனர். தாதாபாய் நௌரோஜி எழுதிய **“இந்தியாவில் வறுமையும் பிரிட்டிஷ் தன்மையற்ற ஆட்சியும்”** என்ற நூலில் செல்வ சுரண்டல் கோட்பாட்டை விளக்கியிருந்தார். இந்தியாவின் செல்வம் எந்தெந்த வழிகளில் இங்கிலாந்துக்கு எடுத்துச் செல்லப்படுகிறது என்பதை பட்டியலிட்டுக் காட்டினார்.
    a. ஊதியங்கள்
    b. சேமிப்பு
    c. ஓய்வூதியங்கள்
    d. இந்தியாவிலிருந்த பிரிட்டிஷ் படைகளுக்கான செலவினங்கள்
- பிரிட்டிஷ் வணிக நிறுவனங்களின் லாபம் என்பதை அந்தப்பட்டியலில் அடங்கியிருந்தன. இதைப்பற்றி விசாரிக்க பிரிட்டிஷ் அரசாங்கம் வெல்பி குழுவை நியமித்தது.
- அதில் முதல் இந்திய உறுப்பினராக தாதாபாய் நௌரோஜி நியமிக்கப்பட்டார்.
- ரானடே, கோகலே போன்ற ஒரு சில மிதவாதிகள் சமூக சீர்திருத்தங்களிலும் கவனம் செலுத்தினர். குழந்தை திருமணம்,

விதவைகள் அவலம் போன்றவற்றை எதிர்த்தனர்.

- 1892 ஆம் ஆண்டு இந்திய கவுன்சில்கள் சட்டத்தின் வாயிலாக மறைமுக தேர்தல் அறிமுகப்படுத்தப்பட்டது. சட்டசபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்தியதும் மிதவாதிகளின் சாதனையாகும்.
- 1893ல் ICS (Indian Civil Service) தேர்வு ஒரே நேரத்தில் இந்தியாவிலும், இங்கிலாந்திலும் நடைபெற வேண்டும் என பிரிட்டிஷ் பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றியது.

## 5. தீவிரவாதிகள் காலம் (1905 - 1917):

- தீவிரவாதிகள் அல்லது தீவிர தேசிய வாதிகள் துணிச்சலான வழி முறைகளைக் கையாண்டு வெற்றிபெற முடியும் என நம்பினர் **பால கங்காதர திலகர், லாலா லஜபதிராய், பிபின் சந்திரபால், அரவிந்த் கோஷ்** ஆகியவர்கள் தீவிரவாத தலைவர்களில் முக்கியமானவர்கள்.

**தீவிரவாதம் தோன்றுவதற்கான காரணங்கள்:**

- 1892 ஆம் ஆண்டு இந்திய கவுன்சில் சட்டப்படி சட்டசபை விரிவாக்கம் தவிர வேறு எந்த குறிப்பிடத்தக்க வெற்றியையும் மிதவாதிகள் பெறத்தவறினர்.
- 1896-97 ஆம் ஆண்டு தோன்றிய பஞ்சத்தினாலும் பிளேக் நோயினாலும் நாடு முழுவதிலும் உள்ள மக்கள் கடும் துன்பத்திற்கு ஆளாயினர்.
- மக்களின் பொருளாதார நிலைமை மேலும் மோசமாகிறது.
- நிறவெறி காரணமாக தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்கள் மோசமாக நடத்தப்பட்டனர்.
- 1904 - 05 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ரஷ்ய - ஜப்பானியப்போரில் ஐரோப்பிய நாடான ரஷ்யாவை ஜப்பான் வென்றது. இதனால் ஐரோப்பிய நாடான பிரிட்டனை இந்தியர்களாலும் வெல்ல முடியும் என ஊக்கம் பிறந்தது.
- கர்சன் பிரபுவின் பிற்போக்கான ஆட்சி தீவிரவாதத்திற்கு உடனடி காரணமாக அமைந்தது. கர்சன் பிரபு கல்கத்தா மாநகராட்சி சட்டத்தை (1899)ல் கொண்டு வந்து இந்தியரின் அதிகாரத்தை குறைத்தார். பல்கலைக்கழகங்கள் சட்டம் (1904) மூலம் பல்கலைக்கழக அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை

குறைக்கப்பட்டது. மேலும் பல்கலைக்கழகங்களின் தன்னாட்சித் தன்மை குறைக்கப்பட்டது. அவை அரசின் துறைகளாக மாறின.

❖ இராஜ துரோக குற்றச் சட்டம் அதிகாரிகள் ரகசிய காப்புச்சட்டம் மக்களின் உரிமைகளை பறித்தது.

❖ கர்சன் பிரபுவின் மோசமான நடவடிக்கை வங்கப்பிரிவினையாகும் (1905)

**தீவிரவாதிகளின் முதன்மைக் குறிக்கோள்:**

❖ தீவிரவாதிகளின் தலையாய குறிக்கோள் சுயராஜ்யம் அல்லது முழு விடுதலையே தவிர வெறும் தன்னாட்சி அல்ல.

**தீவிரவாதிகள் பின்பற்றிய வழிமுறைகள்:**

❖ அரசு நீதி மன்றங்களையும், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளை புறக்கணிப்பதன் மூலம் பிரிட்டிஷ் அரசுக்கு ஒத்துழைப்பு கொடுக்க மறுப்பது.

❖ சுதேசிப் பொருட்களை ஆதரிப்பது மற்றும் அந்நியப் பொருட்களை புறக்கணிப்பது.

❖ தேசியக்கல்வியை வளர்ப்பது.

**தீவிரவாதிகளின் தலைவர்கள்:**

❖ இந்தியாவில் பிரிட்டிஷாருக்கு எதிரான ஒரு முழுமையான இயக்கத்தை தோற்றுவித்தவர் பால கங்காதர திலகர் ஆவார். அவரை லோக் மான்ய திலகர் என்றும் அழைப்பர். மராட்டா மற்றும் கேசரி இதழ்களின் வாயிலாக பிரிட்டிஷாரின் கொள்கைகளை சாடினார்.

❖ தேசிய இயக்கத்தில் கலந்து கொண்டதற்காக பிரிட்டிஷாரால் இரண்டு முறை சிறையில் அடைக்கப்பட்டார்.

❖ பின்னர் 1908 ல் 6 ஆண்டு கால சிறைவாசத்திற்காக மாண்டலே (பர்மா) கொண்டு செல்லப்பட்டார். 1916 ல் பூனாவில் தன்னாட்சி கழகத்தை அமைத்தார். "சுயராஜ்யம் எனது பிறப்புரிமை அதை நான் அடைந்தே தீருவேன்" என்று முழங்கினார்.

❖ லாலா லஜபதிராய் "பஞ்சாபின் சிங்கம்" என்று பலராலும் அறியப்பட்டவர், சுதேசி இயக்கத்தில் இவர் ஆற்றிய பங்கு மகத்தானது. அமெரிக்காவில் 1916ல் தன்னாட்சி கழகத்தை லஜபதிராய் தோற்றுவித்தார். அரசுக்கெதிரான பிரச்சாரத்திற்காக மண்டலே சிறையில் வைக்கப்பட்டார்.

❖ சைமன் குழுவிற்கு எதிரான போராட்டத்தில் போலீஸ்

தடியடியில் காயமடைந்து 1928 நவம்பர் 17ல் உயிர் நீத்தார்.

- பிபின் சந்திரபால் ஒரு மிதவாதியாக தனது வாழ்க்கையை தொடங்கி தீவிரவாதியாக மாறியவர். சுதேசி இயக்கத்தில் பங்கு கொண்டு முக்கிய பங்காற்றினார். தனது அனல் பறக்கும் பேச்சுக்களாலும் எழுத்துக்களாலும் தேசியத்தை நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் பரப்பினார்.
- அரவிந்த கோஷ் சுதேசி இயக்கத்தில் தீவிரமாக பங்கேற்றார். அதற்காக சிறைப்படுத்தப்பட்டார்.
- விடுதலையான பிறகு பிரெஞ்சு பகுதியான பாண்டிச்சேரியில் தங்கி ஆன்மீக நடவடிக்கைகளில் கவனம் செலுத்தினார்.

**வங்கப்பிரிவினையும் தீவிரவாத எழுச்சியும் (1905):**

- இந்திய தேசிய இயக்கத்தில் தீவிரவாதம் தோன்றுவதற்கு 1905 ஆம் ஆண்டு வங்கப்பிரிவினை ஒரு தீப்பொறியாக அமைந்தது.
- மொத்த பிரிட்டிஷ் இந்தியாவின் மக்கட்தொகையில் நான்கில் ஒரு பங்கு மக்கட்தொகையை (78 மில்லியன்) கொண்ட வங்காளப்பகுதியை நிர்வகிப்பது கடினம் என்று கூறி நிர்வாகக்காரணங்களுக்காக வங்கப் பிரிவினை கொண்டு வரப்பட்டதாக காரணம் கூறப்பட்டது. ஆனால் கர்சனது உண்மையான குறிக்கோள்கள் வங்காளத்திலிருந்து இந்துக் களையும் முஸ்லீம்களையும் பிரித்து வைப்பது. தான் நினைத்ததை சாதித்து பிரிட்டிஷ் அரசின் வலிமையை வெளிப்படுத்துவது.
- 1905 அக்டோபர் 16 ம் நாள் வங்கப் பிரிவினை நடைமுறைக்கு வந்தது. அன்றே வங்காள மக்கள் எதிர்ப்புக் கூட்டங்களை நடத்தி அன்றைய தினத்தை துக்க தினமாக அனுசரித்தனர். வந்தே மாதரம் பாடப்பட்டது. ஒற்றுமையின் அடையாளமாக ராக்கிகளை கட்டினர். வங்காளத்தின் அரசியலில் பெரும் மாற்றங்கள் நிகழத் தொடங்கின.
- இந்தியாவில் உண்மையான விழிப்புணர்வு வங்கப்பிரிவினைக்கு பின்பு தான் தோன்றியது என்று காந்தி எழுதினார். இறுதியாக 1911 ல் வங்கப்பிரிவினை தீவிரவாத செயல்களால் ரத்து செய்யப்பட்டது.
- தீவிர தேசியவாதிகளின் செயல்பாடுகள் மிதவாதியான

தாதாபாய் நௌரோஜியை 1906 கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டில் சுயராஜ்யம் குறித்து பேச வைத்தது. அந்த மாநாட்டில் சுதேசி குறித்தும் அந்நியப் பொருட்களுக்கு தடை குறித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

- மிதவாதிகள் இதனால் களிப்படைய வில்லை. மாறாக அரசியலமைப்பு ரீதியாக சுயராஜ்யம் வெல்லப்பட வேண்டும் என்று அவர்கள் கருதினர். இத்தகை கருத்து மோதல்களால் தான் 1907 ஆம் ஆண்டு சூரத் காங்கிரஸ் மாநாட்டில் காங்கிரஸ் கட்சி இரண்டாக பிளவுபட்டு, திலகர் தலைமையில் தீவிரவாதிகள் மாநாட்டை விட்டு வெளியேறினர். இது சூரத் பிளவு எனப்படுகின்றது.